# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

*********

**முறையீட்டு மனு எண்: 106/2017பே–2**

**ஆணை நாள்: 17 –12–2018**

**திரு. அல்லிபாலா,**
**த/பெ. திரு. அல்லிமுத்து,**
**53/7 W. கூத்தனாட்சி அம்மன் கோவில் தெரு,**
**காமயகவுண்டன்பட்டி,**
**தேனி மாவட்டம்–625521.**

**–– முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**மற்றும் 7 அலுவலர்கள்**
**காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி,**
**தேனி மாவட்டம்.**

**–– எதிர் மனுதாரர்கள்.**

**ஆணை.**

தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி, எண்.53/7W, கூத்தனாட்சி அம்மன் கோவில் தெருவினைச் சேர்ந்த, திரு.P. அல்லிபாலா, த/பெ திரு. பி. அல்லிமுத்து, என்பவரது 28.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2017ல் பெறப்பட்டு, மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண்.106/2017 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவின் மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் 15 வார்டுகளுக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள, ஒப்பந்த அடிப்படையில் சாந்தி டிரஸ்ட், கூடலூர் என்ற சுயஉதவிக் குழு நிறுவனம் ஏப்ரல்,2013 முதல் மார்ச் 2015 வரை துப்புரவு பணிகளை மேற்கொண்டு வந்ததாகவும், மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்ட திருமதி. சாந்தி என்பவரால் ஏப்ரல், ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்டு, 2013 ஆகிய மாதங்களில் மட்டுமே தங்களது சுய உதவிக் குழுவின் மூலம் பணிகளை மேற்கொண்டதாகவும், மேற்படி திருமதி. சாந்தி என்பவர் 29.09.2013ல் காலமாகிவிட்டதாகவும், அதன் பின்னர் செப்டம்பர்,2013 முதல் மார்ச்,2015 வரை மேற்படி

தொண்டு நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொண்டது போல் பேரூராட்சியில் பணிபுரியும் திரு.க.மணி, முன்னாள் செயல் அலுவலர், திரு.எ.கணேசன், தற்போதைய செயல் அலுவலர், திரு.முருகேசன், எழுத்தர், திரு.மதன்(எ)மாதேஸ்வரன், துப்புறவு மேற்பார்வையாளர், திரு.செந்தாமரை, துப்புறவு மேற்பார்வையாளர், திரு.ஜெகந்நாதன், துப்புறவு மேற்பார்வையாளர் மற்றும் திரு.சேதுராமன், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் உடந்தையாக போலியாக ஆவணங்களை தயார் செய்து ரூ.7,09,591/– வரை கையாடல் செய்துள்ளதாகவும், இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு, மேற்கண்ட அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

05.05.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க, காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 30.05.2017 நாளிட்ட காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், 2013–14ம் ஆண்டிலிருந்து துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறைக்காக மகளிர் சுய உதவிக்குழு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட டெண்டரில் குறைந்த டெண்டர் வழங்கிய சாந்தி டிரஸ்ட் நிறுவனத்தின் டெண்டர் மேற்படி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.31/நாள் 29.04.2013ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டு, 10 நபர்களை வைத்து, நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.161/– வீதம் வழங்கிட அங்கீகரிக்கப்பட்டு, மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டு 2013–14ம் ஆண்டிற்கு பணியினை மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டதாகவும், பேரூராட்சி நிர்வாகத்தினை பொறுத்தவரை சாந்தி டிரஸ்ட் நிறுவனத்துடன் தான் ஒப்பந்தம் செய்யப்பட்டதே தவிர தனிப்பட்ட பணியாளர்கள் எவருடனும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி செய்யும் பணியாளர்களை தேர்வு செய்வது, மற்றும் பணிக்கு அமர்த்துவது சாந்தி டிரஸ்டின் பொறுப்பாகும் எனவும், பணியாளர்களுக்குரிய ஊதியம் மேற்படி சுய உதவிக்குழுவின் பெயரில் மூன்றம் நபர் காசோலையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், பணி செய்யும் பணியாளர்களுக்கு பேரூராட்சி மூலம் ஊதியம் வழங்கப்படுவதில்லையெனவும், பேரூராட்சியிலிருந்து வழங்கப்படும் காசோலை தொகை சாந்தி டிரஸ்டின் கணக்கில் வரவாக்கப்பட்டு, அதன் பின்னர் மேற்படி நிறுவனத்தின் மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதாகவும், எனவே வேலை செய்த நபர்கள் வேறு, ஊதியம் வாங்கிய நபர்கள் வேறு என்ற புகார் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தி டிரஸ்ட் நிறுவனத்தினை நடத்தி வந்த திருமதி. சாந்தி என்பவர் 29.09.2013ல் இறந்த பின்னர், அவரது சகோதரி அந்நிறுவனத்தின் பொறுப்பேற்ற நிலையில், பேரூராட்சியிலிருந்து வழங்கப்பட்ட காசோலை சாந்தி டிரஸ்ட் நிறுவனத்தின் பெயரிலேயே தொடர்ந்து வழங்கப்பட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிடுவது போல் திருமதி. அமுதாராணி என்பவரின் பெயரில் பணப்பட்டுவாடா ஏதும் செய்யப்படவில்லையெனவும், சாந்தி என்பவர் உயிருடன் இருந்தபோதும் சாந்தி என்ற பெயரில் காசோலை ஏதும் வழங்கப்படவில்லை எனவும், சாந்தி என்பவர் உயிரோடிருந்தபோது மட்டுமின்றி இறந்த பின்னரும் சாந்தி டிரஸ்டு என்ற பெயரிலேயே காசோலை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வேலை சிலமாதங்கள் நடைபெற்றதாகவும், பல மாதங்கள் வேலையே நடக்காமல் வேலை நடந்ததாக மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகார் தொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் மேற்படி பணி தொடர்பாக பேரூராட்சி நிர்வாகத்தால் முறையாக டெண்டர் நடத்தப்பட்டும், பேரூராட்சி மன்றத்தால் முறையான அங்கீகாரம் பெறப்பட்டும், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மூலம் ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள உரிய ஒப்புதல் பெறப்பட்டு, அதன் பின்னரே சாந்தி டிரஸ்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதாகவும், மாதா மாதம் மேற்படி டிரஸ்டால் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாதமும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதியினை பெற்று பட்டியல் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு பட்டுவாடா செய்யப்படும் தொகைகளுக்கு அடுத்து வரும் பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் அனைத்து மாதங்களுக்கும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் குறிப்பிடுவது போல் மேற்படி டிரஸ்ட் மூலம் 4/13, 6/13, 7/13 மற்றும் 8/13 மாதங்களில் மட்டும் பணி நடைபெற்றதாகவும், மற்ற மாதங்களில் பணி நடைபெறவில்லையெனில் தொகை பட்டுவாடா செய்தது குறித்து பேரூராட்சி மன்றத்தால் ஆட்சேபணை எழுப்பப்பட்டிருக்கக்கூடும் என்ற புகாருக்கு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், பணி நடைபெற்ற போது யாரிடமிருந்தும் எந்த புகாரோ ஆட்சேபணையோ எழுந்திராத நிலையில் முறையீட்டு மனுதாரர் தவறான உள் நோக்கத்தோடு புகார் கூறுவதாகவும், மேலும் இது குறித்து முறையீட்டு மனுதாரரால் தேனி மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்யப்பட்டு, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியரால் விசாரணை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் பணிக்கப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் தவறான உள்நோக்கத்தோடு பல வகைகளில் புகார் செய்து நெருக்கடி ஏற்படுத்தி அதன் மூலம் ஆதாயம் தேட முயல்வதாகவும் தெரிவித்து இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 24.08.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி, 17.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. S.T. கணேசன், தான் காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் 12.07.2017 முதல் பணிபுரிவதாகவும், தனக்கு முன்னர் திரு.கணேசன் என்பவர் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், அதற்கு முன்னர் திரு மணி என்பவர் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், Shanthi Trust of Rural Development and Health என்ற அமைப்பின் தலைமைப் பொறுப்பாளர் திருமதி.சாந்தி என்பவருக்கு, திடக்கழிவு மேலாண்மை பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2013–14 ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுவிற்கு பணி வழங்க முடிவு செய்யப்பட்டு 03.04.2013ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதாகவும், இதில் திருமதி.தெரசம்மாள், கூடலூர் (அன்னை தெரசா டிரஸ்ட்) அவர்களாலும் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சாந்தி டிரஸ்ட் சார்பாகவும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதாகவும், அதில் திருமதி. தெரசம்மாள் அவர்கள் நபர் ஒன்றுக்கு ரூ.175/– வீதம் 10 நபர்களுக்கு தேவையான தொகையினை கோரி ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிட்டிருந்ததாகவும், சாந்தி டிரஸ்ட் சார்பாக ரூ.161/– வீதம் 10 நபர்களுக்கு கோரியிருந்ததாகவும், குறைவான ஒப்பந்தப் புள்ளி

கோரியிருந்த சாந்தி டிரஸ்ட் நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்டதாகவும், ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த இருவரும் சகோதரிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

29.04.2013 ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய சாந்தி டிரஸ்டுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க பேரூராட்சி தீர்மான எண் 30/நாள் 29.04.2013ன்படி மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டதாகவும், ஒவ்வொரு மாதமும் 9,10 தேதிகளில் தேவைப் பட்டியல் வந்தவுடன் தொகை பட்டுவாடா செய்யப்படும் எனவும், தொகை பட்டுவாடா செய்யப்பட்ட பின்னரே மன்றத்தில் வைக்கப்பட்டு செலவுகள் அங்கீகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012–13ம் ஆண்டில் சாந்தி டிரஸ்ட் என்பவருக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்த காரணத்தினால் அவருக்கு பணியினை வழங்க மன்றத் தீர்மான எண்.32/நாள்.30.03.2012ல் அங்கீகாரம் பெறப்பட்டதாகவும், 29.09.2013 அன்று ஒப்பந்தம் செய்துகொண்ட திருமதி .சாந்தி என்பவர் மரணம் அடைந்து விட்டதாகவும், 2012–13 மற்றும் 2013–14 ல் டெண்டர் மூலம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த சாந்தி டிரஸ்டுக்கு பணி வழங்கப்பட்டு, 2014–15ல் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டதாகவும், இம்மூன்று நிகழ்வுகளிலும் பெறப்பட்ட மேற்படி நிறுவன Letter pad ல் சாந்தி டிரஸ்ட் நிறுவனம், டிரஸ்ட் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஆவணத்தினை ஒப்பந்தப்புள்ளி வழங்கும் போது பரிசீலிக்கவில்லையெனவும், மேற்படி நிறுவனம் மூலமும் தாக்கல் செய்யவுமில்லை எனவும் இது சம்பந்தமாக கோப்பிலும் ஆவணம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 29.09.2013ல் மேற்படி நிறுவன தலைமை நிர்வாகி காலமான நிலையில், அவரின் சகோதரி திருமதி அமுதாராணிக்கு இப்பணி வழங்கப்பட்டு வந்ததாகவும், இடையில் மேற்படி நபர் இறந்து விட்ட போதும் டெண்டர் ரத்து செய்யப்படாமலும், புதிய டெண்டர் கோரப்படாமலும் இருந்ததாகவும், மேற்படி திருமதி.சாந்தி இறந்த பின்னர், திருமதி.அமுதாராணியால் அனுப்பப்பட்ட கடிதங்களில் இறந்து போன சாந்தி தலைமை நிர்வாகி என குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், 2014–15 ஆண்டிற்கு திருமதி.அமுதாராணிக்கு ஒரு ஆண்டு பணி நீட்டித்து வழங்கப்பட்டதாகவும், 201–13 / 2013–14 ல் ண்டெர் விளம்பரம் செய்ததில் ஓர் ஆண்டிற்கு என விளம்பரம் செய்யப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் இறுதி செய்யப்பட்டதாகவும், திருமதி. சாந்தி இறந்த பின்னர் மறு டெண்டர் போடுவதற்கு 2014–15ல் எந்த ஒப்புதலும் பெறப்படவில்லையெனவும், ஓராண்டிற்கு பின்னர் புதியதாக விளம்பரம் செய்யவேண்டும் என்ற குறிப்புகளும் வைக்கப்படவில்லையெனவும், 07.04.2015 வரை திருமதி அமுதாராணிக்கு சாந்தி டிரஸ்டு என்ற அடிப்படையில் தொகை வழங்கப்பட்டதாகவும்,2014–15ல் டெண்டர் கோரப்படாமல் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டதாகவும், இதற்கான ஒப்புதல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பெறப்பட்டதாகவும் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

29.09.2013க்கு பின்னர் 3/2015 வரை மேற்படி பணிக்கான தொகை, சம்பந்தப்பட்ட சாந்தி டிரஸ்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், இதற்காக 2012–13, 2013–14 மற்றும் 2014–15 ஆகிய ஆண்டுகளில் உரிய தீர்மானங்கள் இயற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 24.08.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி 17.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு R. மதன் (எ) மாதேஸ்வரன் தனது வாக்குமூலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் 25.02.2011 முதல் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிவதாக

தெரிவித்து மேற்கொண்டு இப்பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள விளக்கங்களையே தனது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.11.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2018ல் ஆஜரான தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.க.மணி தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரர் திரு.அல்லிபாலா பற்றி தனக்கு தெரியும் எனவும், சாந்தி டிரஸ்ட் ஆப் ரூரல் அண்டு டெவலப்மெண்ட் என்ற நிறுவபனத்திற்கு 2013ம் ஆண்டு டெண்டர் கோரப்பட்டு அதில் கலந்து கொண்ட இரண்டு நபர்களின் ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த சாந்தி டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டதாகவும், 2012–13 மற்றும் 2013–14 ஆண்டிற்கு பணி ஆணைகள் மன்ற ஒப்புதல் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதலுடன் வழங்கப்பட்டதாகவும், திருமதி. சாந்தி என்பவர் செப்டம்பர்,2013 மாதம் இறந்து விட்ட பின்னர் அவரது சகோதரி இந்த ஒப்பந்தம் தனி நபர் பெயருக்கு எடுக்காமல் மேற்படி நிறுவனம் மூலம் பணி செய்யப்படுகிறது என தெரிவித்ததின் அடிப்படையில் தொடர்ந்து பணிகள் வழங்கப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஒவ்வொரு மாதமும் கசோலை மூலமே பணம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அடுத்து மேற்படி நிறுவனத்திற்கு ஓராண்டு நீட்டிப்புக்கு மன்ற ஒப்புதல் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெறப்பட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் திரு. பாலமுருகன் என்கிற திரு. அல்லிபாலா வேலையற்ற நபர் எனவும், பேரூராட்சி, நகராட்சி, கனிம வள உதவி இயக்குநர் ஆகிய அலுவலகங்களுக்கு சென்று மனு போடாமல் இருப்பதற்கு பணம் கேட்பார் எனவும், அதற்கு வசதியாக தகவல் பெறும் உரிமை சட்டத்தின்படி தகவல்களை பெற்றுக் கொண்டு அதை வைத்து மனு போடுவது இவரின் வாடிக்கை எனவும், அவருடைய தனிப்பட்ட நலனிற்காக அவர் இது போன்று அரசு பணியாளர்களை பணம் பெறும் சுய நல நோக்கில் புகார் மனு என்ற பெயரில் மிரட்டி செயல்படுவதை முழு நேர தொழிலாக கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஆஜரான காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.02.2018 நாளிட்ட வாக்குமூலத்தில் தான் 24.02.2014 முதல் 10.07.2017 வரையிலும், தற்போது மீண்டும் மேற்படி பேரூராட்சி செயல் அலுவலராக உள்ளதாகவும், மேற்படி பேரூராட்சியில் துப்புறவு பணி மேற்கொள்ள 2013ம் ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரு நபர்கள் கலந்து கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி. சாந்தி என்பவருக்கு 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டுகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், இதற்கு பேரூராட்சி மன்ற ஒப்புதலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

திருமதி. சாந்தி என்பவர் செப்டம்பர் 2013ல் இறந்துவிட்ட பின்னர், அவரின் சகோதரி இந்த ஒப்பந்தம் தனி நபர் பெயருக்கு எடுக்கவில்லை எனவும், மேற்படி நிறுவனம் மூலம் பணிகள் செய்யப்படும் என தெரிவித்ததின் அடிப்படையில் தொடர்ந்து பணிகள் வழங்கப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஒவ்வொரு மாதமும் காசோலை மூலமே தொகை வழங்கப்பட்டதகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு பேரூராட்சி மன்ற ஒப்புதல் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதலுடன் மார்ச், 2015 வரை இப்பணியினை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் அப்சரா என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், இது குறித்து உள்ளூர் நபர்களிடம் பேசி எதிர் காலத்தில் பணியிடங்கள் காலியானால்

முன்னுரிமை வழங்கப்படும் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு, தொகை காசோலை மூலம் வழங்கப்பட்டதாகவும், இதில் எந்த கையாடலும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் திரு.பாலமுருகன் என்ற திரு.அல்லிபாலா வேலையற்ற நபர் எனவும், நகராட்சி, பேரூராட்சி, கனிம வன உதவி இயக்குநர் உள்ளிட்ட அலுவலகங்களுக்கு சென்று தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் பெற்றுக் கொண்டு அதை வைத்து மிரட்டுவது இவரது வாடிக்கை எனவும், இதேபோன்று காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி சம்பந்தமாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண் (MD) No. 17786/2016ல் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பில் இவர் பொது நலனுக்காக வழக்கு தொடரவில்லை எனவும் அவருடைய தனிப்பட்ட நலனிற்காக நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்தியுள்ளார் என குறிப்பிட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக தெரிவித்து, இது போன்று அரசு பணியாளர்களை பணம் பெறும் சுய நல நோக்கில் புகார் மனு என்ற பெயரில் மிரட்டி செயல்படுவதை மட்டுமே முழுத் தொழிலாக கொண்டுள்ளார் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்து, மேற்படி நீதிப்பேராணையின் தீர்ப்பு நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 12.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்பேரில், 25.10.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.அ.அல்லிபாலா தனது வாக்குமூலத்தில், 28.04.2017 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் 15 வார்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள சாந்தி டிரஸ்ட், கூடலூர் என்ற சுய உதவிக் குழு, ஏப்ரல், 2012 முதல் மார்ச், 2015 வரை நியமனம் செய்யப்பட்டதாகவும், திருமதி. சாந்தி என்பவர் 2013 ஏப்ரல், ஜுன், ஜுலை, ஆகஸ்டு மாதங்கள் மட்டுமே சுய உதவிக் குழுவின் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும், மேற்படி திருமதி. சாந்தி 29.09.2013ல் இறந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதற்கு பின்னர் அவரின் சகோதரி திருமதி. அமுதாராணி என்பவர் அந்த பணியினை மேற்கொண்டதாகவும், மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர்கள் திரு. மணி, மற்றும் திரு.கணேசன், தற்போதைய செயல் அலுவலர் திரு. முருகேசன், அப்போது அங்கு எழுத்தராக இருந்த திரு. மதன் (எ) மாதேஸ்வரன் திரு.செந்தாமரை, துப்புரவு மேற்பார்வையாளர், திரு.ஜெகந்நாதன், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் திரு. சேதுராமன், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் போலி ஆவணங்கள் தயார் செய்து ரூ.7,09,591/– முறைகேடு செய்து அவர்களுக்குள் எடுத்துக் கொண்டதாகவும், இவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவித்துள்ளார். திருமதி, சாந்தி இறந்த பிறகு பேரூராட்சி சார்பாக பேரூராட்சி அலுவலர்கள் தான் இப்பணியினை மேற்கொண்டதாகவும், இது குறித்து தேனி மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமைச் செயலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு ஆகியவற்றிக்கு மனு செய்ததாகவும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்த முறைகேடு நடக்கும்போது பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியில் இருந்தனர் எனவும் தெரிவித்து தனது வாக்குமூலத்துடன் எழுத்து மூலமான வாதுரையினையும் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற 29.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 28.04.2017 நாளிட்ட முறையீட்டு மனுவினைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2018ல் அளித்த வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரையின் நகலினை தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, கூடுதல் வாதுரையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாக காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி அலுவலக

ஆவணங்களை ஆராய்ந்தும், விசாரணை மற்றும் கள ஆய்வு மேற்கொண்டும் அறிக்கை சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

17.11.2018 நாளிட்ட தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கையில், மேற்படி முறையீட்டு மனுதாரரின் 25.10.2018 நாளிட்ட கூடுதல் வாதுரை மற்றும் வாக்குமூலம் தொடர்பாக தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் 23.11.2018ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்து வாதுரையில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கான விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு 1–ல், 5/2013, 9/2013 மற்றும் 10/2013 ஆகிய மாதங்களில் எந்த ஒரு துப்புரவு பணிகளும் மேற்கொள்ளவில்லை என தகவல் வழங்கப்பட்டுள்ளதில் முரண்பாடுகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்ட நேர்வில் ஆவணங்களை ஆய்வு மேற்கொண்டதில், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். 87/2015/நாள் 28.12.2015ல், 5/2013 மற்றும் 9/2013 ஆகிய மாதங்களில் சுய உதவிக் குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படாததால் வருகைப் பதிவேட்டின் நகல் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக ஆவணங்களை ஆய்வு செய்யப்பட்டதில் 5/2013ல் சுய உதவிக் குழு மூலம் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், ஆனால் 9/2013 மற்றும் 10/2013 ஆகிய மாதங்களில் சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு 9/2013ல் ரூ.42,504/– காசோலை எண்.0286057/02.12.2013 ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளதாகவும், 10/2013 மற்றும் 11/2013ம் மாதங்களுக்கு ரூ.86,405/– ஐ காசோலை எண். 000497/10.12.2013 ல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு எண்.2ஐ பொறுத்தவரை, சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனம் 31.10.2013 மற்றும் 02.02.2014 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட இரண்டு லெட்டர் பேடுகளில் உள்ள திருமதி ஜெ.அமுதாராணி என்பவரது கையொப்பம் அலுவலக ஆவணங்கள் மேலொட்ட சரிபார்ப்பு நிலையிலேயே கையொப்ப வேறுபாடு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு எண். 3–ஐ பொருத்தவரை, சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனம் மூலம் துப்புரவு பணி செய்தமைக்காக 31.10.2013 அன்று கூலி வழங்க விண்ணப்பம் செய்தமைக்கு சுமார் 400 நாட்கள் கடந்து 02.12.2014 அன்ற கூலித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட குறைபாட்டினை பொறுத்தவரையில், சாந்தி நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு 10/2013 மற்றும் 11/2013 ஆகிய மாதங்களுக்கு காமய்யகவுண்டன்பட்டி பேங்க் ஆப் பரோடா வங்கி கிளை காசோலை எண். 000497/10.12.2013ல் ரூ.86,425/– செயல் அலுவலரால் விடுவிக்கப்பட்டுள்ளதால், முறையீட்டு மனுதாரரால் தொண்டு நிறுவனம் தொகை விடுவிக்கக் கோரி, 400 நாட்களை தாண்டிய பிறகு தொகை விடுவிக்கப்பட்டதாக தெரிவித்திருப்பதில் உண்மையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடு எண். 4–ஐ பொருத்த வரை சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவன 10/2013 மற்றும் 11/2013 ஆகிய மாதங்களில் துப்புரவு பணி மேற்கொண்டமைக்காக கூலி வழங்க வேண்டி விண்ணப்பம் செய்த லெட்டர் பேடுகளில் உள்ள ரீப்பர் ஸ்டாம்பிற்கும் (சிதைவு முத்திரை) துப்புரவு பணி புரிந்தவர்கள் வருகை பதிவேடுகளில் உள்ள ரப்பர் ஸ்டம்பிற்கும் (சிதைவு முத்திரை) ஆவணங்கள் துவக்க நிலை மேலொட்ட சரிபார்ப்பில் வேறுபாடு உள்ள விவரம் தெரியவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடு எண் 5ஐ பொறுத்த வரை சாந்தி டிரஸ்ட் மூலம் கூலி வழங்க விண்ணப்பித்த லெட்டர் பேடு மற்றும் கூலி பெற்றுக் கொண்டமைக்காக ஒப்புதல் வழங்கிய லெட்டர் பேடுகளில் உள்ள திருமதி ஜெ.அமுதாராணி என்பவரின் கையொப்பம் மற்றும் ரப்பர் ஸ்டாம்பு முத்திரை (சிதைவு முத்திரை) ஆவணங்கள் துவக்க நிலை மேலொட்ட சரிபார்ப்பு நிலையிலேயே வேறுபாடு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு 6ஐ பொறுத்த வரை 11/2014, 12/2014, 1/2015 மற்றும் 2/2015 ஆகிய மாதங்களில் சாந்தி டிரஸ்ட் நிறுவன வருகை பதிவேட்டில் உள்ள பெயர்களுக்கும், சம்பள பட்டுவாடா செய்யப்பட்டுள்ள பட்டியல்களில் உள்ள பெயர்களும் முரண்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு 7–ஐ பொறுத்தவரை காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 148/2018 நாள் 23.11.2018ன்படி சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் அந்நிறுவனத்தின் பதிவு எண்.329/1992 என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்நிறுவனம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விவரம் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை எனவும், தவிர சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனத்தினை நடத்தி வந்த திருமதி. சாந்தி என்பவர் 29.09.2013ல் இறந்து விட்ட நிலையில், இந்நிறுவனத்தினை அவரின் தாயார் திருமதி ஜெ.தெரசம்மாள் என்பவர் தொடர்ந்து நடத்தி வந்ததாகவும், கடந்த மார்ச் 2015ல் ஒப்பந்தக்காலம் முடிந்து விட்ட நிலையில் அந்நிறுவனத்தின் தற்போதைய இருப்பிடம் குறித்து அறிய இயலவில்லை எனவும், தற்போது அந்நிறுவனம் செயல்பாட்டில் இல்லை எனவும் தொடர்புடைய சார் பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகங்களிலும் தொண்டு நிறுவன பதிவு குறித்த விவரங்கள் இல்லை என தகவல் உரிமைச் சட்டத்தின் கோரிய விண்ணப்பத்திற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடு 8–ஐ பொறுத்த வரையில் முறையீட்டு மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் செயல் அலுவலரால் சாந்தி டிரஸ்ட் தொண்டு நிறுவனம் மூலம் 5/2013, 9/2013 ஆகிய மாதங்களில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படாததால் வருகைப் பதிவேட்டின் நகல் வழங்கப்படவில்லை என தகவல் வழங்கப்பட்டுள்ள நேர்வில் ஆவணங்களின் அடிப்படையில் 5/2013ம் மாதம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படாமலும், 9/2013 மற்றும் 10/2013 ஆகிய மாதங்களில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொகை விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் செயல் அலுவலரால் 5/2013 மற்றும் 9/2013 ஆகிய மாதங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என முரண்பாடான தகவல் வழங்கப்பட்டதின் தொடர்ச்சியாகவே அனைத்து மாதங்களிலும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகவும் முறையீட்டு மனுதாரரால் கருத நேரிட்டுள்ளது எனவும், துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, குறைவான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்தது, பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான செலவினங்கள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், சுய உதவிக் குழு மூலம் சேகரம் செய்யப்படும் கழிவுகள் மற்றும் உரம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட விவரங்களுக்கு உரிய பதிவேடுகளும் பராமரிக்கப்பட்டுள்ளதாகவும் தனது ஆய்வறிக்கையில் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நேர்வில் முறையீட்டு மனு மற்றும் வாதுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துரையின் அடிப்படையில் ஆவணங்கள்/பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் சாந்தி டிரஸ்ட் நிறுவனத்தால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், வரிசை எண் 1,2,4,5 மற்றும் 6 ஆகிய ஐந்து இனங்களில் வழங்கப்பட்ட தகவல்கள் முரண்பாடுகள் காரணமாகவே பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், முறைகேடுகள் நிகழ்ந்துள்ளது என முறையீட்டு மனுதாரராலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி முன்னாள்/இந்நாள் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரை, மேற்கண்ட இனங்களின் மீதான தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சியில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சில புகார்களை தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் 25.10.2018 நாளிட்ட கூடுதல் வாதுரையில் தெரிவித்துள்ள விவரங்களுக்கு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கையில் சிலவற்றில் உண்மையில்லை என பேரூராட்சி ஆவணங்களை ஆய்வு மேற்கொண்டும் கள ஆய்வின் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாந்தி டிரஸ்ட் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணி மேற்கொண்ட மாதங்களுக்கான பட்டியல் தொகை பேரூராட்சி செயல் அலுவலரால் உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் காமய்யகவுண்டன்பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் வாக்குமூலத்தின்படி, முறையீட்டு மனுதாரர் சில அலுவலர்கள் மீது புகார் தெரிவித்திருப்பது பொது நலன் கருதி அல்ல என்ற விவரம் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் புலனாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.. மேலும் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவிற்கான குறிப்பான எந்தவிதமான ஆதார ஆவணங்களும் சமர்ப்பிக்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் பெற்ற விவரங்களுடன் மட்டுமே தனது புகார்களை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் இது போன்று பொது நலன் ஏதுமின்றி தனிப்பட்ட நலனிற்காக வழக்கு தொடர்ந்துள்ளதாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் அளிக்கப்பட்ட தீர்ப்பிலும், (நீதிப்பேராணை எண்.17786/2016நாள்.19.09.2016) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி முறையீட்டு மனுவின் மீதான தொடர் நடவடிக்கைகள் கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் சகோதரிகள் இருவர் சமர்ப்பித்துள்ளார்கள் என்பதை பரிசீலிக்காமல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியது தவறு என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

இருப்பினும், இம்முறைமன்ற நடுவ ஆணைகளைத் தொடர்ந்து, தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கள ஆய்வில் கண்டறியப்பட்டு, ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள புகாரிலுள்ள பணிகள் தொடர்பான சில குறைபாடுகள் தொடர்பில் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், உரிய நபர்களிடமிருந்து மேற்படி

இழப்பிற்கான தொகையினை மீளப் பெற நடவடிக்கை எடுக்கவும், இவ்வினங்களை கவனிக்கத்தவறிய உரிய அலுவலர்கள் மீது, தக்க விளக்கங்கள் பெற்று துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு. அல்லிபாலா,
த/பெ. திரு. அல்லிமுத்து,
53/7 று. கூத்தனாட்சி அம்மன் கோவில் தெரு
காமயகவுண்டன்பட்டி,
தேனி மாவட்டம்–625521.

2.செயல் அலுவலர்,
காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108.